கோரிக்கையில் ஏதாவது குறைபாடு இருக்கிறதா என்றும் தெரிய வில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு அதுபற்றி தெரிந்தால், ஒரு கடிதத்தின் வாயிலாக அரசுக்குத் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விடுதலைப் போராட்ட வீரரான பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவரின் திருவுருவப் படத்தை எல்லா அரசு அலுவலகங்களிலும் வைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருந்தும் இன்னும் பெருவாரியான அரசு அலுவலகங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவப் படத்தை வைக்கவில்லையே, இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் பற்றியது கேள்வி. திருவுருவப் படத்தைப்பற்றிய கேள்வி இதிலே இல்லை. இதுபற்றிய தகவல் ஏதும் இல்லை. தனியாக இதைப் பார்க்கலாம்.

திருநெல்வேலி கே. டி. சி. தொழிற் சங்கம்.

132—(* வினா எண் 8844) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கே. டி. சி. யில் எந்த தொழிற்சங்கத் திற்கு பஸ் பாசும், வேலை செய்யாமல் சம்பளமும் (OD;) கொடுக் கப்பட்டு வருகிறது?

(ஆ) இதனை மற்ற சங்கங்களுக்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்தில் அண்ணா தொழிலாளர்கள் சங்கம் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கத்தில் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுக்கு

1987 மார்ச் 23]

மட்டும், நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், பணிமனைகளில் தொழிலாளர்கள் குறைகளைக் கேட்டு அறிவதற்கும் வசதியாக அயல்பணி வருகைப் பதிவும் மற்றும் இலவச அனுமதி பயணச் சீட்டும் வழங்கப்படுகின்றன. மற்ற தொழிற் சங்கங்களுக்கும் பேச்சு வார்த்தைக்காக வரும்போது இச்சலுகை வழங்கப்படுகிறது.

மோட்டார் வாகன விபத்து ஈட்டுத் தொகை.

133—(* வினா எண் 9828) திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்குகளில் மரணம் அடைந்தவருக்கு வழங்கப்படும் தொகை உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்குகளில் மரணம் அடைந்தவருக்கு வழங்கப்படும் தொகை உயர்த்துதல் சம்பந்தமாக கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விபத்து நடந்து மரணமடைந்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னார்கள். இந்த ஆண்டிலிருந்தாவது இந்த உதவித் தொகையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்துகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லையென்றுதான் நான் சொன்னேன். ஆகவே, ஏற்கெனவே கொடுக்கப்படுவது தொடர்ந்து கொடுக்கப்படும்.